**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

-----

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI**

**Sessions Case No. 18 of 2023**

**Deposition of witness for** : **PW9**

**Name** : **சசிக்குமார்**

**Father's / Husband Name** :

**Village** :

**Taluk** :

**Calling** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of July 2025.**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது கல்லாவி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது நாகரசம்பட்டி காவல் நிலைத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வளராக பணி புரிந்து வந்தேன். கடந்த 06.05.2022 ம் தேதி இரவு சுமார் 9.30 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது வேலம்பட்டி கிராமத்தை சேர்ந்த வெங்கட்ராமகவுண்டர் மகன் கிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி தனது மகனை அடித்துவிட்டதாக புகார் கொடுக்க வேண்டும் என்றும் தனக்கு எழுதபடிக்க தெரியாது என்று சொன்னதனின் பேரில் காவல் உதவி ஆய்வாளர் உத்தரவு படி மேற்படி கிருஷ்ணன் சொன்ன வாக்குமூலத்தை பதிவு

செய்து அவருக்கு படித்து காண்பித்து சரி என்றும் தெரியும் என சொல்லி கையொப்பம் பெற்று நடவடிக்கைக்காக காவல் உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் இது சம்மந்தமாக விசாரித்தார்.

குறுக்கு விசாரணை.

காவல் உதவி ஆய்வாளர் சொன்னதின் பேரில் நான் கிருஷ்ணன் வாக்குமூலும் எழுதினேன். கிருஷ்ணன் புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தாரா, ரேகை வைத்தாரா என்றால் கையொப்பம் செய்தார். புகார் வாக்குமூலத்தில் உள்ள வாசகங்கள் காவல் உதவி ஆய்வாளர் சொன்ன வாசகங்கள் அடிப்படையில் எழுதினேன் என்றால் சரியல்ல. புகார் தாரருக்கு எழுத படிக்க தெரியும் என்றாலும் அதை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் தாரார் சொல்லாத விவரங்களை நான் எழுதிக்கொண்டேனா என்றால் சரியல்ல.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.